**த. நா.ச.பே. எண் : 011** **நாள் : 23.09.2015**

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 23.9.2015

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேளாண்மைப் பிரிவின் ஓர் அங்கமாகவும், கிராமப்புற பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் ஒரு கருவியாகவும், பெண்களுக்கு சுய வேலைவாய்ப்பினை அளிக்கும் தொழிலாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்ற கால்நடை வளர்ப்புத் தொழிலை ஊக்குவிக்கும் வகையில், இரண்டாம் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தும் நோக்கோடு, கால்நடை பராமரிப்புத் துறைக்கும், பால் வளத் துறைக்கும்; புரதச் சத்துள்ள உணவைப் பெருக்குவதிலும், கணிசமான அந்நிய செலாவணியை ஈட்டுவதிலும் முக்கியப் பங்கு வகிக்கும் மீன் வளத் துறைக்கும், முன் எப்போதும் இல்லாத அளவுக்கு எனது அரசால் முக்கியத்துவம் தரப்பட்டு கடந்த நான்கு ஆண்டுகளில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கிராமப்புற பொருளாதாரத்தில் கால்நடை வளர்ப்பின் பங்களிப்பை உயர்த்தும் பொருட்டும், பால் உற்பத்தியை பெருக்கும் வகையிலும், மீன் வளத்தை பெருக்கும் வகையிலும், பின் வரும் வளர்ச்சித் திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமை அடைகிறேன்.

1. கடந்த நான்காண்டுகளில் 301 கோடியே 25 லட்சம் ரூபாய் செலவில் 1143 கால்நடை நிலையங்களுக்கு புதிய கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 42 கோடியே 23 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், 193 கால்நடை மருத்துவ நிலையங்களுக்கு புதிய கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் 3.57 லட்சம் கால்நடை வளர்ப்போர் பயன் பெறுவர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. கால்நடை பராமரிப்புத் துறையின் மாவட்ட கால்நடைப் பண்ணைகளின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், உயர் மரபுத் திறன் கொண்ட கால்நடைகளை கொள்முதல் செய்யவும், 9 கோடியே 46 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் விவசாயிகள் குறைந்த விலையில் உயர் மரபணு கொண்ட கால்நடைகளைப் பெற்று கால்நடைத் தொழிலை லாபகரமாக மேற்கொள்ள இயலும்.

3. ராணிப்பேட்டை கால்நடை தடுப்பு மருந்து உற்பத்தி நிலையத்தை ‘‘சிறந்த ஆய்வக நடைமுறைகள்’’ தரத்திற்கு மேம்படுத்த, புதிய கால்நடை நோய் தரக் கட்டுப்பாட்டுக் கூடம் 19 கோடியே 92 லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் 8.50 கோடி தடுப்பூசி மருந்தினை

தரக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைக்கு உட்படுத்தி தமிழகம் முழுவதும் தரமான தடுப்பூசிகள் விநியோகம் செய்யப்படும்.

4. சைதாப்பேட்டையில் 29 கோடியே 70 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், ஒரு புதிய ஐந்து மாடி பல்துறை அலுவலக வளாகம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போதுள்ள இட நெருக்கடியைப் போக்கும் விதமாக, இவ்வளாகத்தில், கால்நடை பராமரிப்புத் துறை, மீன்வளத் துறை, தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டு முகமை, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு மீனவர் கூட்டுறவு இணையம் மற்றும் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையம் ஆகிய அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு போதுமான இட வசதியுடன் அலுவலகங்கள் அமைக்கப்படும்.

5. தமிழக கால்நடைகளின் வளத்தையும், நலத்தையும் மேம்படுத்த, கால்நடைகளுக்கு தேவையான தடுப்பூசி மற்றும் நோய் கண்டறிய பயன்படும் ஆய்வகப் பெட்டிகளின் தரமறிய; **கால்நடை உயிரியல் பாதுகாப்பு சோதனைச் சாலை மற்றும் சிறப்பு ஆராய்ச்சி மையம் என்ற உலகத் தரமிக்க சிறப்பு ஆராய்ச்சி மையம், 12 கோடியே 75 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்** என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை மாதவரத்தில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக வளாகத்தில், இது அமைக்கப்படும். மேலும், இதுவரை பறவைக் காய்ச்சல் மற்றும் கோமாரி நோயினைக் கண்டறிவதற்கு வட மாநிலங்களில் உள்ள ஆய்வுச் சாலைகளையே பயன்படுத்த வேண்டிய நிலை இருந்தது. தற்போது இந்த மையம் நிறுவப்படுவதால், மேற்கண்ட நோய்களை இவ்வாய்வகத்திலேயே கண்டறிய வசதி ஏற்படும். இதன் மூலம், விவசாயிகள் மற்றும் கோழி வளர்ப்போர் மிகுந்த பயன் பெறுவர்.

6. அவசர, அவசிய மருத்துவ வசதிக்காக கால்நடைகளை அழைத்து வர இயலாத அளவுக்கு தொலைதூர கிராமப் பகுதிகளில் வசித்து வரும் விவசாயிகளின் கால்நடைகளுக்கு அவசர சிகிச்சை அளிக்கும் பொருட்டு, இந்தியாவிலேயே முதன்முறையாக 10 **“நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள் (Animal Mobile Medical Ambulance)”** தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தால் 6 கோடியே 34 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. தருமபுரி, காஞ்சிபுரம், திருவள்ளூர், நீலகிரி, புதுக்கோட்டை, விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, மதுரை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் பால் பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 32 கோடியே 78 லட்சத்து 87 ஆயிரம் ரூபாய் செலவில் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

8. மாவட்டங்களிலிருந்து பால் கொண்டு வருவதற்கு தனியார் பால் டேங்கர்களை மட்டுமே நம்பியிருப்பதை தவிர்க்கும் பொருட்டு 61 பால் டேங்கர்கள் 15 கோடியே

15 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

9. ஈரோடு, விருதுநகர் மற்றும் தருமபுரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தை சார்ந்த கிராமப்புற பகுதிகளில் குளிரூட்டு வசதிகளை மேம்படுத்துவதற்காக, 16 கோடியே 37 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

10. சென்னை மாநகர பால் பண்ணையில் உயர் வெப்ப நிலையில் பாலை பதப்படுத்தி பாக்கெட்டுகளில் அடைக்கும் இயந்திரங்கள் மற்றும் 5 லிட்டர் அளவு கொண்ட பால் பாக்கெட்டுகள் தயாரிக்க தேவையான இயந்திரங்கள் 19 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

11. சென்னை பெருநகரில் ஆவின் பால் பொருட்கள் நுகர்வோர்களுக்கு எளிதில் கிடைக்கச் செய்யும் வகையில், ஆவின் நிறுவனத்தின் 16 மண்டலங்களில், ஒவ்வொரு மண்டலத்திலும், ஒரு அதி நவீன பாலகம் வீதம், 16 பாலகங்கள் 10 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

12. சென்னை மாநகரத்தில் மாதவரம், அம்பத்தூர், சோழிங்கநல்லூர் ஆகிய மூன்று ஆவின் பால் பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் 27 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

13. படகுகள் பாதுகாப்பாக நிறுத்தப்படுவதற்கான மீன்பிடி துறைமுகங்கள் மற்றும், மீன் இறங்கு தளங்கள் அமைக்கவும், பிடித்து வரப்பட்ட கடல் உணவுகளை பதப்படுத்தும் வசதிகளை உருவாக்கவும் நடப்பு நிதியாண்டில், தமிழகத்தில் கடலூர் மாவட்டத்தில் பேட்டோடை, தூத்துக்குடி மாவட்டத்தில் சிங்கித்துறை மற்றும் பழைய காயல், நாகப்பட்டினம் மாவட்டத்தில் சாமந்தான்பேட்டை மற்றும் திருமுல்லை வாசல் ஆகிய **5 இடங்களில் மீன் இறங்கு தளங்கள் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்** என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் **465 மீன்பிடி படகுகள் பாதுகாப்பாக நிறுத்துவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு சுமார் 8,400 மீனவர்கள் பயனடைவர்.**

14. தமிழ்நாட்டில் மீன் குஞ்சு உற்பத்தியை அதிகரித்திடும் பொருட்டு, நடப்பாண்டில் திருவள்ளூர் மாவட்டம் பூண்டி, கரூர் மாவட்டம் குளித்தலை மற்றும் திருக்காம் புலியூர், தருமபுரி மாவட்டம் சின்னாறு, கிருஷ்ணகிரி மாவட்டம் பாம்பாறு, தஞ்சாவூர் மாவட்டம் தட்டான்குளம், திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறு, திண்டுக்கல் மாவட்டம் அணைப்பட்டி, சிவகங்கை மாவட்டம் பிரவலூர் மற்றும் மாணகிரி ஆகிய 10 இடங்களில் உட்கட்டமைப்பு பணிகள் 25 கோடி ரூபாய் செலவிலும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் ஆழியார், அமராவதி மற்றும் திருமூர்த்தியிலுள்ள மீன் குஞ்சு உற்பத்தி பண்ணைகள்,

5 கோடியே 35 லட்சம் ரூபாய் செலவிலும் ஆக மொத்தம் **30 கோடியே 35 லட்சம் ரூபாய் செலவில் 13 இடங்களில் மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பு பண்ணைகள், நடப்பாண்டில் மேம்படுத்தப்படும்** என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் கூடுதலாக **ஆண்டொன்றிற்கு 50 லட்சம் மீன் குஞ்சு விரலிகள் உற்பத்தி செய்யப்பட்டு கூடுதலாக 1,500 டன் மீன்கள் உற்பத்தி செய்ய வழிவகை ஏற்படும்.**

**15.** அலங்கார மீன்களில் அதி நவீன உற்பத்தி மற்றும் வளர்ப்புத் தொழில்நுட்பங்கள் மூலம் தமிழ்நாட்டில் அலங்கார மீன் வளர்ப்பு தொழில் முனைப்பு திறன் மேம்படுத்துதல் மற்றும் தொழில்நுட்ப பூங்கா அமைத்தல் என்ற திட்டமானது, தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத்தின் மூலம் மாதவரத்தில் **10 கோடியே 30 லட்சம்** ரூபாய் மதிப்பீட்டில், செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் தமிழகத்தில் உள்ள அலங்கார மீன் வளர்ப்பவர்கள், தொழில் முனைவோர்கள் மற்றும் வெளிநாட்டு சந்தைப்படுத்துதலில் ஈடுபட்டுள்ளோர் பயனடைவர்.

மொத்தத்தில் **306** கோடியே **55** லட்சம் ரூபாய் மதிப்பிலான மேற்கண்ட திட்டங்கள் கிராமப்புற பொருளாதாரம் மேம்பாடு அடையவும், பால் மற்றும் மீன்கள் உற்பத்தி பெருகவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*****

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**